[1st November 1962

Goods transport service

* 1057 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start goods tranport service by the Government Transport Department; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) No, Sir.

(*b*) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம் : லாரி ஆபரேட்டர்கள் வேலை நிறுத்தம் செய்த நேரத்தில் அமைச்சர் அவர்கள் கூறினார்களே, அது அவர்களைப் பயமுறுத்துவதற்காக மட்டுந்தானா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வேலை நிறுத்தத்தை அவர்கள் தொடர்ந்து நடத்தியிருந்தால், லாரி சர்வீசைக்கூட அரசாங்கம் எடுத்து நடத்துவதற்கு முன்வந்திருக்கும். வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கவில்லை. அதனால் கைவிட்டாகி விட்டது.

பஞ்சாயத்து நிர்வாகம்

*** 1058 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து தலைவர்களின் பேரில் அடிக்கடி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அதிக அளவில் மாநிலத்தில் கொண்டுவரப் படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) பஞ்சாயத்து நிர்வாகம் சீரான முறையில் நடைபெறும் பொருட்டு தலைவர் தேர்தல்-பதவி இழத்தல் முறைகள் ஏதாகிலும் சட்ட மாறுதல் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேச முண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (அ) 1962-ம் வருடம் ஜூன் மாதம் முடிய 190 பஞ்சாயத்துத் தலைவர்கள் பேரில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அவற்றில் 80 தலைவர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

(இ) இல்லை, ஐயா.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : 'பஞ்சாயத்துப் பிரசிடெண்ட்களை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்காகச் சட்டங்கள் இயற்ற அரசாங்கம் சம்மதிக்கிறது' என்று திருச்சியிலே முதல் அமைச்சர் அவர்கள் பேசியுள்ளார்களா? அப்படிப் பேசியிருந்தால், அதற்கான சட்டங்கள் எப்பொழுது கொண்டுவரப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரை, முதல் அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டத்தை மாற்றப் போவதாகக் கூறவில்லை.

1st November 1962]

திரு. ம. கமலநாதன் : பதவியிலிருந்து நீக்கப்பட்ட ஸ்தல ஸ்தாபனத் தலைவர் கவுன்சில் மெம்பராக இருக்க அனுமதிக்கப் படுகிறாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது அந்தச் சட்டத்தில் குறைபாடு இருப்பதைக் கண்டு, அது திருத்தப்பட்டு வருகிறது.

திரு. ம. கமலநாதன் : தெளிவான உத்தரவு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பப்பட்டால், அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கும் அல்லவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதை அரசாங்கம் கவனித்து வருகிறது.

ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்கள்

* *1059 கேள்வி.—திரு. முனு ஆதி*
திரு. பி. நடராஜன் : } *கனம் நிதி அமைச்சர்*
தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தற்போதைய விலைவாசிகளின் உயர்வு காரணத்தை முன்னிட்டு ஓய்வுபெற்ற தமிழ்நாடு அரசாங்க ஊழியர்களின் பென்ஷனை அதிகப்படுத்தவோ அவர்களுக்கு இலவச வைத்திய வசதி, குழந்தைகளின் கல்விக்கான சலுகை ஆகியவை அளிக்கவோ உத்தேசமுண்டா ?

(இ) இதுபற்றிய மத்திய அரசாங்கத்தின் ஆலோசனை ஏதும் வந்துள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) & (இ) இல்லை ஐயா.

பஞ்சாயத்துத் தேர்தல்கள்

* *1060 கேள்வி.—திரு. கி. இரா. சம்பந்தம் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) பஞ்சாயத்து தேர்தல்களை எப்போது நடத்த உத்தேசம் ?

(இ) எந்த முறையில் தேர்தல் நடத்த உத்தேசம் ? மார்க்கிங் முறையா அல்லது கைதூக்கும் முறையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The attention of the hon. Member is invited to the answer to Legislative Assembly Question No. 431 on the same subject on 19th July 1962.

(*b*) Election to panchayats is conducted by the secret ballot system. The question whether it should be by marking system or ordinary system of secret ballot, has not yet been decided.

* 1061 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to change the present system of election of Presidents of Panchayats, into direct election by voters ; and